# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය
## අති විශෙෂ
# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை
## அதி விசேஷமானது

අංක 14,726/6 — 1966 දෙසැම්බර් 18 වැනි ඉරිදා — 1966.12.18
14,726/6 ம் இலக்கம்—1966 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)—பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ.—பீ. 88/50.

#### உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டம் (அத்தியாயம் 171)

(171 ஆம் அத்தியாயமான) உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் உணவு விவசாய அமைச்சராலாக்கப்பட்ட ஒழுங்குவிதி.

எம். டி. பண்டா,
உணவு விவசாய அமைச்சர்.

கொழும்பு,
திசம்பர் 18, 1966.

ஒழுங்குவிதி

1952 ஆம் ஆண்டு சூன் 20 ஆந் தேதிய 10,416 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்டதும் காலத்துக்காலம் திருத்தப்பட்டுள்ளதுமான 1952 ஆம் ஆண்டின் உணவுக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள், அவற்றின் III ஆம் பாகத்தில் "கட்டுப்படுத்தப்பட்ட பொருட்களின் ஒதுக்கீட்டுக்கும் பங்கிட்டுக்குமான ஒழுங்குவிதி" ஆகும் ஊ என்ற தலைப்பின் கீழ், அப்பாகத்தின் 4(1) என்ற ஒழுங்குவிதியில் "விற்கப்பட்ட" என்ற சொல்லிற்குப் பதிலாக "விற்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகிறது.

12-1165

---

ச. வ.—பீ. 88/50.

#### உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டம் (அத்தியாயம் 171)

சட்டமுறையான பங்கீட்டில் மாற்றம்

1966 டிசம்பர் 19 ஆந் தேதியிலிருந்து மறு அறிவித்தல் கொடுக்கப்படும்வரை.

(1) இதனகத்துள்ள அட்டவணையின் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் வகுப்பைச் சேர்ந்தவரும் 1952 ஆம் ஆண்டின் உணவுக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளில் வரைவிலக்கணமிடப்பட்டபடி ஒரு தோட்டத்தில் வசிப்பவரும் ஒரு வயதுக்கதிகமானவருமான எவ்வாளுக்கும் விற்பனை வகையாக அல்லது வேறு வகையாக விற்கப்படக்கூடிய அல்லது வழங்கப்படக்கூடிய ; அல்லது

(2) இதனகத்துள்ள அட்டவணையின் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் வகுப்பைச் சேர்ந்தவரும் பங்கீடு நடைமுறையிலிருக்கும் (தோட்டமொன்றைத் தவிர்ந்த) நகர அல்லது நகரற்ற ஏதேனும் இடப்பரப்பில் வசிப்பவரும் ஒரு வயதுக்கதிகமானவரும் அவ்வகுப்பைச் சேர்ந்த ஓர் ஆளுக்கான அரிசிப் பங்கீட்டுப் புத்தகத்தை வைத்திருப்பவருமாகிய எவ்வாளுக்கும் விற்பனை வகையாக அல்லது வேறு வகையாக விற்கப்படக்கூடிய அல்லது வழங்கப்படக்கூடிய,

அரிசி அல்லது நெல் வாரப் பங்கீடானது இவ்வட்டவணையின் II ஆம் அல்லது III ஆம் நிரலில் உள்ள குறிப்பிடப்பட்ட நேரொத்த அளவாயிருத்தல் வேண்டுமென 1952 ஆம் ஆண்டின் உணவுக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின் ஊ எனும் தலைப்பின் II ஆம் பாகத்தின் 5 ஆம் ஒழுங்குவிதியினதும் ஊ எனும் தலைப்பின் III ஆம் பாகத்தின் 4(1) ஆம் ஒழுங்குவிதியினதும் நியதிகளின்படி இதனால் அறிவிக்கப்படுகின்றது.

எம். பீ. சேனநாயகா,
பதில் உணவு ஆணையாளரும் உணவுக் கட்டுப்பாட்டாளரும்.

கொழும்பு, திசம்பர் 18, 1966.

அட்டவணை

| நிரல் I<br>வகுப்பு | | | நிரல் II<br>அரிசி இருத்தலில் | அல்லது | நிரல் III<br>நெல் இருத்தலில் |
|---|---|---|---|---|---|
| குழந்தை | ... | ... | 2 | ... | 4 |
| பிள்ளை | ... | ... | 2 | ... | 4 |
| சாதாரணம் | ... | ... | 2 | ... | 4 |
| வேலையாள் | ... | ... | 2 | ... | 4 |

ஒரு 'இருத்தல்' அல்லது "இரு" என்பது அவோடுபோய் இருத்தலளவை முறையின் நியம இருத்தல் எனக் கருதப்படுதல் வேண்டும்.

12-1166

இலங்கை அரசாங்க அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.